# அனைத்து மரித்த ஆன்மாக்களின் நினைவு நாள்
# கல்லறையில் (இல்லத்தில்) பொதுநிலை வழிபாடு
# பொதுநிலையினரால் வழிநடத்தப்படுவது

வழிநடத்துனர்: முடிவில்லாத வாழ்வைத் தேடி
வருகின்றேன் இறைவா
உன் முன்னிலையில்
மண்டியிட்டுக் கிடக்கின்றேன்
இயேசையா
முடிவில்லாத வாழ்வைத் தேடி
வருகின்றேன் ( அல்லது பொருத்தமான பாடல்)

அனைவரும்: தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே - ஆமென்

வழிநடத்துனர்: இறந்தோரிடமிருந்து இயேசுவை உயிர்த்தெழச் செய்தவரும், நம் தந்தையுமான கடவுளின் அருளும், அமைதியும் நம் மத்தியில் இருப்பதாக

அனைவரும்: இறைவன் என்றென்றும் வாழ்த்தப்பெறுவாராக

வழிநடத்துனர்: நம்பிக்கையால் முன் குறித்து, நமக்கு முன் மரித்த நம் அன்புக்குரியவர்களை நினைவு கூர நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். நம் அன்புக்குரிய சகோதரர்/சகோதரிகளை ......( பெயர்களைக் குறிப்பிடலாம்) நினைவுகூருகின்றோம். இவர்களின் ஆன்மாக்கள் கிறிஸ்துவில் அமைதி அடைவதாக. முடிவில்லாத ஒளி இவர்(இவர்கள்) மேல் ஒளிர்வதாக.

வழிநடத்துனர்: திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்: 15: 50-55

அன்பர்களே, நான் சொல்வது இதுவே; ஊனியல்புடைய மனிதர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைய முடியாது. இதோ, ஒரு மறைபொருளை உங்களுக்குச் சொல்கிறேன்; நாம் யாவரும் சாக மாட்டோம்; ஆனால் அனைவரும் மாற்றுரு பெறுவோம். ஒரு நொடிப்பொழுதில், கண் இமைக்கும் நேரத்தில் இறுதி எக்காளம் முழங்கும்போது, இது நிகழும். எக்காளம் முழங்கும்போது, இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர். நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும். சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையை அணிந்தாக வேண்டும். அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்துகொள்ளும்போது, மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும். “சாவு முற்றிலும் ஒழிந்தது. வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?

ஆண்டவர் வழங்கும் அருள் வாக்கு

அனைவரும்: இறைவனுக்கு நன்றி

(அனைத்து மரித்த ஆன்மாக்களின் நினைவுநாள் திருப்பலியில் பயன்படுத்தப்படும் பிற வாசகங்களையும் தெரிவு செய்யலாம்.)

## சங்கீதப் பதிலுரை: திருப்பாடல்: 23

**பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை**

ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை
பசும் புல்வெளிமீது அவர் எனை இளைப்பாறச் செய்வார்
அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்
எனக்கு அவர் புத்துயிர் அளிப்பார்; தம்பெயருக்கேற்ப எனை நீதி வழி நடத்துவார்

**பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை**

மேலும் சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும்
நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்
உம் கோலும் நெடுங்கழியும் என்னத் தேற்றும்

**பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை**

என்னுடைய எதிரிகளின் கண்முன்
எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்
என் தலையில் நறுமணத் தைலைம் பூசுகின்றீர்
எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது

**பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை**

உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம்
உம் அருள்நலமும் பேரன்பும் எனைப் புடைசூழ்ந்து வரும்
நானும் ஆண்டவரின் இல்லத்தில்
நெடுநாள் வாழ்ந்திருப்பேன்

**பல்லவி: ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை**

வழிநடத்துனர்: இறைவார்த்தையை நம் உள்ளத்தில் தியானிக்கும்பொருட்டு சிறிது நேரம் அமைதியில் இருப்போம்.

## மன்றாட்டு மாலை

ஆண்டவரே இரக்கமாயிரும் ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும் கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும் ஆண்டவரே இரக்கமாயிரும்

விண்ணகத்தில் இருக்கிற தந்தையாம் இறைவா மரித்த ஆன்மாக்களின் மீது இரக்கமாயிரும்
உலகத்தை மீட்ட சுதனாகிய எங்கள் இறைவா
தூய ஆவியாகிய இறைவா
தமதிரித்துவமாயிருக்கும் ஒரே இறைவா

புனித மரியே ...மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடும்
புனித மரியே இறைவனின் தாயே
புனித மிக்கேலே
புனித கபிரியேலே
தூதர்களும் அதிதூதர்களுமான இறைவனின் புனித தூதர்களே,
புனித திருமுழுக்கு யோவானே
புனித யோசேப்பே
பிதா பிதாக்களும் இறைவாக்கினர்களுமான புனிதர்களே
புனித பேதுருவே
புனித பவுலே
புனித யோவானே
திருத்தூதர்களும், நற்செய்தியாளர்களுமான அனைத்துப் புனிதர்களே
புனித ஸ்தேவானா
புனித லவுரேஞ்சியாரே
மறைசாட்சிகளான அனைத்துப் புனிதர்களே
புனித கிரகோரியாரே
புனித அமிர்தநாதரே
ஆயர்களும், பாவமன்னிப்பை வழங்கியவர்களுமான அனைத்துப் புனிதர்களே
புனித மரிய மதலேனாளே
புனித கத்தரீனாளே
அனைத்து கன்னியர்களும் விதவைகளுமான அனைத்துப் புனிதர்களே
இறைவனின் அனைத்துப் புனிதர்களே

- உமது இரக்கத்தினாலே, அவர்களை மீட்டருளும் ஆண்டவரே, ..

எங்கள் மேல் இரக்கமாயிருந்து, தயவாய் எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே -
அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே -
அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.
உலகின் பாவங்களைப் போக்கும் இறைவனின் செம்மறியே - -
அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

மன்றாடுவோமாக!

அனைத்து நம்பிக்கையாளர்களுடைய படைப்பாளரும், மீட்பருமாகிய இறைவா, மரித்த உம் அடியார்களுக்காக செய்யப்படும் பக்தியுள்ள மன்றாட்டுகளை ஏற்றுக்கொண்டு, அவர்கள் மிகுந்த ஆவலோடு கேட்கின்ற பாவமன்னிப்பை இவர்களுக்கு அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். எக்காலமும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்.

## <u>விசுவாசிகளின் மன்றாட்டு</u>

வழிநடத்துனர்: எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தை, அவருடைய மகனாகிய கிறிஸ்துவை, சாவினின்று உயிர்ப்பித்தார். அவரே சாவின் அனைத்து கட்டுகளையும் எக்காலத்திற்கும் உடைத்தெறிந்தார். அவரில் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் நிலைவாழ்வைப் பெறுவார் என்று வாக்களித்த இயேசுவின் பெயரால், இறந்தோரையும் வாழ்வோரையும் மீட்டருள மன்றாடுவோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: மரித்த ஆன்மாக்கள் அனைவரையும் இறைவனின் புனிதர்களின் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று ஆண்டவரை மன்றாடுவோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: மரித்த ஆன்மாக்கள் அனைவரும் இறுதி நாளில் உயிற்பெற்றெழ வேண்டுமென்று ஆண்டவரை மன்றாடுவோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: மீண்டும் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையில் மரித்த ஆன்மாக்கள் அனைவரும் இறைவனை முகம் முகமாய்ப் பார்க்கும் வரமருள ஆண்டவரை மன்றாடுவோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: நம் பங்கில் நமக்காகப் திருப்பணியாற்றி மரித்த அனைத்து திருத்தொண்டர்கள், குருக்கள் ஆயர்கள் (பெயர்கள்...) அனைவருக்கும் இறைவன் அவரின் விண்ணக வழிபாட்டில் தகுந்த இடமளிக்க வேண்டுமென்று ஆண்டவரை மன்றாடுவோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: தம் வாழ்நாள் முழுவதும் எளிமை, புனிதம் கீழ்ப்படிதலோடு இயேசுவைப் பின்பற்றி வாழ்ந்து மரித்த நம் சகோதர சகோதரர்கள் இறைவன் திருமுன் புகழ்ந்துபாடும் விண்ணகத்தின் அனைத்துப் புனித மக்களோடும் இணைத்தருள வேண்டுமென்று ஆண்டவரை மன்றாடுவோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: மரித்த இவர்களின் நம்பிக்கையை (நம் சகோதரர்/சகோதரி ) நீர் ஒருவர் மட்டுமே அறிந்த, இறைவா, உம்மில் இவர்கள் புத்துணர்ச்சியும், இளைப்பாறுதலும், அமைதியும் பெற்றுக்கொள்ள உம்மை மன்றாடுகிறோம்

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: ஒருநாள் நாங்களும் சாவை வென்று உம்முடைய விண்ணக விருந்தில் பங்குகொண்டு, எந்நாளும் உம்மைப் புகழ்ந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அனைவரும்: ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.**

வழிநடத்துனர்: கடவுளின் அரசு இந்த உலகில் வரவேண்டுமென்ற ஆவலோடு, நம் ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டலை, நம் தந்தையிடம் சமர்ப்பிப்போம்.

**அனைவரும்: விண்ணுலகில் இருக்கின்ற எங்கள் தந்தையே................**

வழிநடத்துனர்: ஆண்டவராகிய இறைவா!
உம்முடைய காலங்கள் முடிவற்றவை
உம்முடைய இரக்கமும் அளவிடமுடியாதது.
எங்களுடைய வாழ்வும் இறப்பும் மிகவும் குறுகியதும்
கணிக்க முடியாதவையாகவும் உள்ளது.
எனவே நாங்கள் இந்த உலகில் வாழுமட்டும்,
நாங்கள் உமது தூய ஆவியாரால் புனிதத்திலும், நீதியிலும்
வழிநடத்தப்படவும், இதனால், உம் புனித திரு அவையோடு
ஒன்றிணைந்து, நம்பிக்கையிலும் நேர்த்தியான அன்பிலும் உமக்குப் பணி
செய்திட உதவியருளும். இந்த உலகில் எங்களுடையப் பயணம்
முடிவுக்கு வரும்போது, என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்யும்
உம்முடைய அரசில் மகிழ்ச்சியோடு நாங்கள் வந்து சேரும் வரமருள
உம்மை மன்றாடுகிறோம்.

அனைவரும்: ஆமென்

(இவ்வழிபாடு கல்லறைத் தோட்டத்தில் நடைபெற்றால், இப்போது கல்லறைகளை புனித நீரால் ஆசீர்வதிக்கலாம். அல்லது வழிபாட்டின் நிறைவிலும் கல்லறைகளை ஆசீர்வதிக்கலாம்)

வழிநடத்துனர்: நித்திய இளைப்பாறுதலை இவர்களுக்கு அளித்தருளும் ஆண்டவரே,
அனைவரும்: முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக

வழிநடத்துனர்: இவர்கள் அமைதியில் இளைப்பாறுவார்களாக
அனைவரும்: ஆமென்.

வழிநடத்துனர்: இவர்களுடைய ஆன்மாக்களும், நம்பிக்கையில் மரித்த அனைத்து
ஆன்மாக்களும் இறைவனின் இரக்கத்தினால் அமைதியில்
இளைப்பாறுவதாக
அனைவரும்: ஆமென்.

வழிநடத்துனர்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பும், அமைதியும் நம்மை
ஆசீர்வதித்து, நமக்கு ஆறுதல் அளிப்பதாக.
எல்லாம் வல்ல தந்தை, மகன் தூய ஆவியார் நம் கண்களில்
இருக்கும் ஒவ்வொரு கண்ணீரையும் துடைப்பாராக.

அனைவரும்: ஆமென்.

Para-liturgy for All Souls at the cemetery (or at home) by Laity

Leader: Just as Jesus died and has risen again,
so through Jesus God will bring with him
those who have fallen asleep;
and as in Adam all die,
so also in Christ will all be brought to life.*(or a suitable hymn)*

All: In the name of the Father, and of the Son, and of the Holy Spirit. Amen.

L: The grace and peace of God our Father, who raised Jesus from the dead be with all present here.

All: Blessed be God forever.

L: We gather this day to remember our loved ones who have gone before us marked with the sign of faith. We remember N.(names of the faithful departed to be read). May they *(he/she)* rest in the peace of Christ *(in eternal peace)* and let perpetual light shine upon them (*him/her).*

.

L: A reading from the First Letter of St Paul to the Corinthians 15:50-55

What I am saying, brothers, is that mere human nature cannot inherit the kingdom of God: what is perishable cannot inherit what is imperishable. Now I am going to tell you a mystery: we are not all going to fall asleep, but we are all going to be changed, instantly, in the twinkling of an eye, when the last trumpet sounds. The trumpet is going to sound, and then the dead will be raised imperishable, and we shall be changed, because this perishable nature of ours must put on imperishability, this mortal nature must put on immortality. And after this perishable nature has put on imperishability and this mortal nature has put on immortality, then will the words of scripture come true: Death is swallowed up in victory. Death, where is your victory? Death, where is your sting?

L: The Word of the Lord.
A: Thanks be to God.

*Alternatively, you may choose one of the readings at Mass for All Souls Day*

Responsorial Psalm Psalm 22(23)

**R: The Lord is my shepherd: there is nothing I shall want**.

The Lord is my shepherd;
there is nothing I shall want.
Fresh and green are the pastures
where he gives me repose.
Near restful waters he leads me,
to revive my drooping spirit.

**The Lord is my shepherd: there is nothing I shall want.**

He guides me along the right path;
  he is true to his name.
If I should walk in the valley of darkness
  no evil would I fear.
You are there with your crook and your staff;
  with these you give me comfort.

**The Lord is my shepherd: there is nothing I shall want.**

You have prepared a banquet for me
  in the sight of my foes.
My head you have anointed with oil;
  my cup is overflowing.

**The Lord is my shepherd: there is nothing I shall want**.

Surely goodness and kindness shall follow me
  all the days of my life.
In the Lord's own house shall I dwell
  for ever and ever.

**The Lord is my shepherd: there is nothing I shall want.**

L: Let us pause for a moment of silence as we reflect on the Word of God.

Litany

| | |
|---|---|
| Lord, have mercy on us. | Lord, have mercy on us. |
| Christ, have mercy on us. | Christ, have mercy on us. |
| Christ, hear us. | Christ, graciously hear us. |
| God the Father of Heaven, | Have mercy on the Souls of the faithful departed. |
| God the Son, Redeemer of the world, | |
| God the Holy Spirit, | |
| Holy Trinity, One God, | |
| Holy Mary , | Pray for the Souls of the faithful departed. |
| Holy Mother of God, | |
| Saint Michael, | |
| Saint Gabriel, | |
| All holy Angels and Archangels, | |
| Saint John the Baptist, | |
| Saint Joseph, | |
| All holy Patriarchs and Prophets, | |
| Saint Peter, | |
| Saint Paul, | |
| Saint John, | |
| All holy Apostles and Evangelists, | |
| Saint Stephen, | |
| Saint Lawrence, | |

All holy Martyrs,
Saint Gregory,
Saint Ambrose,
All holy bishops and confessors,
Saint Mary Magdalen,
Saint Catherine,
All holy Virgins and widows,
All Saints of God,

Be merciful, Spare them, O Lord. Be merciful, graciously hear us, O Lord.

Lamb of God, Who take away the sins of the world, Grant them eternal rest.
Lamb of God, Who take away the sins of the world, Grant them eternal rest.
Lamb of God, Who take away the sins of the world, Grant them eternal rest.

Let Us Pray.
O God, Creator and Redeemer of all the faithful, grant to the Souls of Thy departed servants the remission of all their sins, that through our pious supplications they may obtain the pardon which they have always desired. Through Christ Our Lord. R. Amen.

PRAYER OF INTERCESSION

God the Almighty Father, raised Christ his Son from the dead, who broke the chains of death once and for all. With the promise of eternal life to all who believe and call upon your name, we ask you Lord to save all your people living and dead.
Lord, graciously hear us.

That N., (the faithful departed/they) be admitted to the company of the saints.
Lord, graciously hear us.

That N., (the faithful departed/they) be raised up on the last day.
Lord, graciously hear us.

That N., (the faithful departed/they) in the hope of rising again, may see You face to face.
Lord, graciously hear us.
That our brother N., (deacon/priest/bishop) who served in the ordained ministry be given a place in the liturgy of heaven.
Lord, graciously hear us.

That our brother/sister N., (religious) who spent his/her life following Jesus, poor, chaste and obedient by counted among all holy men and women who sing in your courts.
Lord, graciously hear us.
That N., whose faith is known to you alone find refreshment, rest and peace.
Lord, graciously hear us.
That one day we may all share in your banquet, praising you for your victory over death.
Lord, graciously hear us.

With longing for the coming of God’s kingdom, let us offer our prayers to the Father:

Our Father...

L: Lord God,
whose days are without end
and whose mercies beyond counting,
keep us mindful
that life is short and the hour of death unknown.
Let your Spirit guide our days on earth
in the ways of holiness and justice,
that we may serve you
in union with the whole Church,
sure in faith, strong in hope, perfected in love.
And when our earthly journey is ended,
lead us rejoicing into your kingdom,
where you live for ever and ever.

A: Amen

*(When the para-liturgy is celebrated at the cemetery, the blessing of the grave can take place now or you may choose to bless the grave at the end of the service.)*

L: Eternal rest grant unto them, O Lord,
A: and let perpetual light shine upon them.

L: May they rest in peace.
A: Amen.

L: May their souls and the souls of all the faithful departed,
through the mercy of God, rest in peace.

A: Amen

A: May the love of God and the peace of the Lord Jesus Christ
bless and console us
and gently wipe every tear from our eyes:
in the name of the Father,
and the Son,
and the Holy Spirit. Amen.